1989 மே 11]

(முற்பகல் 9-40)

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை துரிதப்படுத்துவதற்காக மத்திய அரசுக்கு இந்தத் திட்டத்திற்காக நம்முடைய மாநில அரசு நிதி ஒதுக்கித் தருவதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. எவ்வளவு தொகையை ஒதுக்கித் தருவதாக நம்முடைய அரசு உள்ளது, அதற்கான பேச்சு வார்த்தை நடைபெற்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ரயில்வே வாரியத்தினுடைய மேலாளருடன், மத்திய அளவிலே உள்ள மேலாளருடன் நான் டெல்லிக்குச் சென்றிருந்தபோது பேசினேன். அவர்கள் மாநில அரசு தன்னுடைய பங்குத் தொகையாக ஏதாவது தரவேண்டுமென்று கேட்டார்கள். மாநில அரசு ஏற்கெனவே நிலம் வழங்கியிருக்கிறது, அதை ஒரு பங்குத் தொகையாக நீங்கள் ஈடு செய்து கொள்ளவேண்டுமென்று நான் அவர்களிடத்திலே குறிப்பிட்டேன். இருந்தாலும் அவர்களிடத்திலே பணம் இல்லாத கஷ்டம் இருக்கிறது. எனவே அதற்காகவாவது நீங்கள் மாநிலத்தின் சார்பில் பணம் தர வேண்டுமென்று கேட்டார்கள். நான் தருவதாக ஒப்புக்கொண்டேன். ஆனால் அதை நீங்கள் கடனாகத்தான் எடுத்துக்கொண்டு திருப்பித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். இன்னும் அவர்களிடமிருந்து பதில் வரவில்லை.

வாடகை பாக்கி

குறுகிய கால வினா எண். 2—(*வினா எண். 4001), திரு. ஜி. பொன்னுபிள்ளை: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் தோட்டத்தில் பொதுப்பணித் துறையைச் சார்ந்த வீடுகளில் வசிக்கும் முன்னாள் இந்நாள் சட்டப் பேரவை—மேலவை உறுப்பினர்கள் அரசுக்கு வாடகை பாக்கி ஏதேனும் செலுத்த வேண்டுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே; (அ) மற்றும் (ஆ): சென்னை அரசினர் தோட்டத்தில் பொதுப்பணித்துறையைச் சார்ந்த வீடுகளில் வசிக்கும் முன்னாள்—இன்னாள் சட்டப்பேரவை—சட்ட மேலவை உறுப்பினர்கள் 31—3—1989 முடிய அரசுக்கு செலுத்த வேண்டிய வாடகை பாக்கி ரூ. 7,17,724.20 ஆகும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐயா, வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்களே, தங்களுக்கு அடுத்த வாய்ப்புத் தரப்படும்.

திரு. ஜி. பொன்னு பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக நமது நாட்டிலே விவசாயிகள் தங்களுடைய சொந்த நிலத்திற்கு கிஸ்தி செலுத்தவில்லை என்றாலும், அவர்கள் வீட்டிலே உள்ள மின் இணைப்புகளுக்கு மின் இணைப்பிற்கான பணம் கட்டாவிட்டாலும், தோட்டத்திலே உள்ள கிணற்றிலே உள்ள மோட்டாருக்கு உரிய காலத்திலே மின் இணைப்புக்கான பணத்தைக் கட்டாவிட்டாலும் அவர்கள் வீட்டிலே உள்ள பண்ட பாத்திரங்களை எல்லாம் எடுத்து அதிகாரிகள் ஜப்தி செய்கிறார்கள். அந்த முறையிலே அரசாங்கத்தின் வீட்டிலே குடியிருந்து கொண்டு அதற்கு இவ்வளவு பெரிய தொகைகளை எல்லாம் பாக்கி வைத்திருக்கும் அந்த உறுப்பினர்கள் மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, நிறைய பாக்கி ஒவ்வொரு உறுப்பினர் மீதும் இருக்கிறது. ஆனால் பாக்கிகளை கட்டவேண்டுமென்று திருப்பி திருப்பி அவர்களுக்குக் கவனப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. எனவே இது குறித்து மேல் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை அரசுக்கு வந்திருக்கிறது. எனவே யாரும் பாக்கிக் கட்டாமல் தப்பித்துப் போவதற்கு இந்த அரசு விட்டு விடாது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பொன்னுபிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் கூறிய கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலையை அவர்கள் தொடர்ந்து கடைப்பிடிக்கும்போது உரிய நடவடிக்கைகளைஅரசு செய்யாவிட்டால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த மதிப்பு மிகு மன்றத்திற்கு புதியதாக வந்திருக்கிற உறுப்பினர்கள் கூட மற்றவர்களைப்போல தாங்களும் வாடகை செலுத்த வேண்டாம் என்று எண்ணக்கூடிய ஒரு எண்ணம் ஏற்படும். எனவே அந்த நிலை நீடிக்காத அளவுக்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: ஒன்றைக் காட்டி மற்ற உறுப்பினர்கள் தப்பித்துக் கொள்ளலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். வரி பாக்கி உள்ளவர்களிடத்திலே நிச்சயமாக வரி பாக்கி வசூலிக்கப்படும். வசிக்கிற உறுப்பினர்களிடத்திலேயிருந்தும் ஒழுங்காக வாடகை பாக்கி வசூலிக்கப்படும்.

1989 மே 11]

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த வாடகை பாக்கி எத்தனை லட்சம் ரூபாய் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்தார்கள். இப்போது இருக்கிற மெம்பர்கள் பற்றி, அதாவது சட்டமன்றம் நடக்கும்போது வாடகை தேவையில்லை என்று இருக்கிறது. சட்டமன்றம் இல்லாதபோது அதற்கு வாடகை வசூல் பண்ணுவது என்றிருக்கிறதே அதை நிவர்த்தி பண்ணி கொடுக்க முடியுமா? அதோடு இல்லாமல் நேற்றைய தினம் பத்திரிக்கையில் பார்த்தேன், ஏற்கனவே உள்ள அமைச்சர்கள் எல்லாம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது விடை சொல்லிக் கொண்டிருப்பவர் பொதுப்பணித் துறை அமைச்சர். அவர் சட்டமன்ற விடுதி ஓரத்தில் இருக்கிற வீடுகளுக்குத்தான் சொந்தக்காரர். சட்ட மன்ற விடுதிக்கு நான் சொந்தக்காரன். (சிரிப்பு).

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சரி சபாநாயகர் அவர்களே, நீங்களே பதில் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னைக் கேள்வி கேட்க முடியாது. தனியாக அறையில் சந்திக்கவும். விவரமாகப் பேசுவோம்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : உங்களுக்கு மட்டும் தெரிந்தால் போதாது. பப்ளிக் எல்லோருக்கும் தெரிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் கேள்வியிலை வராது.

திரு. எம். அப்துல் லத்திப் : தலைவர் அவர்களே, 7 இலட்சம் ரூபாய்க்கு அதிகமான தொகை பாக்கியாக இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எத்தனை பேர்களிடத்திலிருந்து இந்த பாக்கித் தொகை வரவேண்டும் ? யார், யார் அந்தத் தொகைகளை செலுத்த வேண்டும் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு துரைமுருகன் : தலைவர் அவைர்களே பாக்கி வைத்திருக்கின்றவர்கள் முன்னால் அமைச்சர் காளிமுத்து 31—3—83 முடிய உள்ள வாடகை நிலுவை பாக்கி ரூ. 91,355. திரு. என். ஆர். இராதா ரூ. 80,323·80 திரு வி. பாலகுரு ரூ. 50,585, திரு. எம். பி. சுப்பிரமணியம் ரூ. 62,762, திரு. பி. முனிசாமி, மேலவை உறுப்பினராக இருந்தவர் ரூ. 1,14,077·65, திரு. ஏ. கே. வில்வம் ரூ. 46,787.50,

திரு. சி. இராமலிங்கம் ரூ. 25,332.35, திரு. ஏ. ஏ. ஜாபார்ஃ ரூ. 25,332.35, திரு. எம். அம்பிகாபதி ரூ. 73,638.85, திரு. கே. குப்புசாமி ரூ. 39,631.60, திரு. குமரி அனந்தன் ரூ. 26,497.15, திரு. அ. ரகுமான்கான் ரூ. 2,441, திரு. துரை கோவிந்தராஜன் ரூ. 41,662.15. திரு. ஆர். அருணாசலம் ரூ. 8,972. திரு. பி. பெருமாள் ரூ. 7,702.15, திரு. ஏ. நல்லசிவம் ரூ. 11,101.60, திரு. எஸ். அழகர்சாமி ரூ. 3,345.05, திரு. கே. கலைமணி ரூ. 6,177.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு குமரி அனந்தன் அவர்கள் இப்போது கேள்வி கேட்கப் போகிறீர்களா? வாடகை தள்ளுபடி கேட்கப் போகிறீர்களா? (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன்: மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே ரூ.7 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையை அனைவரும் செலுத்த வேண்டும் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய பெயராலும் ரூ. 26,000 பாக்கியிருப்பதாக இங்கே சொன்னார்கள். சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்திலே சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே தங்கியிருக்கின்றவர்களுக்கு இலவசம் என்று நான் கருதுகிறேன். இந்த சட்ட மன்றம் கலைக்கப்பட்டதற்குப் பின்னால் அப்படி இலவசமாக இருந்தவர்களுக்கு ஐந்தே ரூபாய் போட்டு ஐந்து நாட்கள் வரை அவர்கள் தங்கலாம் என்று சொல்லுகின்ற ஒருசலுகை இருந்தது. ஏனென்றால் இங்கே உறுப்பினர் விடுதியிலே இருக்கின்றவர்கள் அநேகமாக இங்கே குடும்பத்தோடு இருக்கமாட்டார்கள். ஊரிலே இருப்பார்கள். எப்போதாவது வருவார்கள் என்ற காரணத்திற்காக... (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். ஒரு நிமிஷம், என சம்பந்தப்பட்டதாக இருக்கின்ற காரணத்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சட்டமன்ற உறுப்பினர் விடுதி தொடர்பானதா? பொதுப் பணித் துறையைச் சார்ந்த வீடு தொடர்பானதா?

திரு. குமரி அனந்தன்: வீடு தொடர்பானது. அதனாலே அவர்கள் எப்போதாவது வருகின்ற காரணத்தினாலே 5, 5 ரூபாய் என்ற சலுகையிலே அவர்களுக்குப் போடப்பட்டது. அதைக்கூட குறைக்கவேண்டும் என்று மனு கொடுத்துக்கொண்டிருந்தார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் சில ஆண்டு காலமாகவே அந்த போஷன் பிளாக் 2 என்பதிலே குடியிருந்து வருகின்றேன். ரூ. 175 சட்டமன்றம் நடைபெறுகின்ற நேரத்திலே அதற்கு வாடகை வசூலிக்கப்படுகிறது என்றால் எங்கள்

சம்பளத்திலே கழிக்கப்படுகிறது. பிறகு சட்டமன்றம் கலைக்கப்பட்ட உடனேயே அதற்கு மார்க்கெட் வேல்யூ என்று சொல்லி இரண்டாயிரத்து முன்னூற்று சொச்ச ரூபாய் அதற்கு போடப்பட்டது. எனவே ரூ. 175 கட்டிக்கொண்டிருந்த நாங்கள் உடனே தேசீய காங்கிரசைச் சேர்ந்த அத்தனை பேரும் ஒரு மனுவை கவர்னரிடம் கொடுத்து இது எங்களுக்கு பழைய வாடகையிலேயே அடுத்த தேர்தல் வரை இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அதற்குப் பின்னாலே நான் தனிப்பட்ட முறையிலே கூட கவர்னர் அவர்களுக்கு ஒரு மனுவை கொடுத்தேன். இவ்வளவு வாடகை போட்டிருக்கிறார்கள். அடுத்த தேர்தல் வருகின்ற காரணத்தினாலே, அடுத்த தேர்தலிலே போட்டியிட்டு வெல்லுகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே இதே இடத்தில் குடும்பத்தோடு இருந்துகொண்டிருக்கின்ற நாங்கள் அங்கேயே இருப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கேட்டோம்.

(முற்பகல் 9–50)

அந்த மனுவுக்கு அவரிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. எனவே, முறையீடு அங்கே இருக்கிறபோது, என்னுடைய பாக்கியைப் பற்றி சட்டமன்றத்திலே இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே, அநேகமாக ரகுமான்கான், நாங்கள் எல்லாம் கட்டாமல்தான் இருந்தோம். அவர் எப்போது கட்டினார் என்று எனக்குத் தெரியவில்லை. இரண்டாயிரம் ரூபாய் பாக்கிதான் இருக்கிறது. ஏனென்றால் ஒருவருக்கொருவர் குடும்பத்திலே பழகிக்கொள்கிற காரணத்தினாலே சொல்கிறேன். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, மேல் முறையீடு இருக்கிறது என்றால் கவர்னரிடம் இருக்கின்ற கோப்பு உங்களிடம் தான் வரும். எல்லாக் கோப்பையும்போல, ஏற்கனவே இப்படிப் பாக்கி வைத்திருந்தவர்கள், இந்த சந்தர்ப்பத்திலே. இந்த சூழ்நிலையிலே பாக்கி வைத்திருந்தவர்களுக்கு, எம். ஜி. ஆர். அரசாங்கம் அதற்குத் தள்ளுபடி செய்தது என்பதையும் உங்களுக்கு நினைவுபடுத்திக்கொள்கிறேன். எனவே, எங்களைப்பான்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தச் சலுகையினை, அந்த ஏற்கனவே நடந்த அளவிற்கு நீங்கள் நிச்சயமாகச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை உண்டு. ஆதலினாலே, இவைகளை அந்த 175 ரூபாயிலேயே எங்களை வைத்து வசூலிக்கவேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே: இதுபற்றிய முழுவிவரம் எனக்குத்தெரியாது. நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு குமரி அனந்தன் அவர்கள்

இது குறித்து கடந்த கால ஆட்சியிலே ஆளுநர் அவர்களுக்கு ஒரு முறையீடு செய்து கொண்டதாகக் குறிப்பிட்டார்கள். அத்தகைய கோப்பு எதுவும் இதுவரையில் என்னுடைய பார்வைக்கு வர வில்லை. இது ஓரளவு கருணை உள்ளத்தோடு கவனிக்கப்பட வேண்டும் என்பதுபோல நம்முடைய குமரி அனந்தன் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். கடந்த கால ஆட்சியைப் பற்றியும் சொன்னார்கள். எனக்கு நினைவு இருக்கிறது, இப்போது இந்த கேள்விக்கு விடை அளித்த பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் இதேபோல ஒரு வீட்டிலே குடியிருந்தபோது, அவருக்கு மார்க்கெட் ரேட் வாடகை போடப்பட்டு, அவர் கட்டவேண்டிய 11,000 ரூபாய்க் காக பென்ஷன் தொகை பிடித்துக்கொள்ளப்பட்டது. அது மாத்திரமல்ல. ஒரு நாள் அவருக்குக் கண்டிப்பாக உத்திர விடப்பட்டு, வீட்டுக்குள்ளே நுழைந்து பண்ட பாத்திரங்களை எல்லாம் வெளியே எடுத்துப் போட்டு, அவருடைய வீடு காலி செய்யப்பட்டது. இருந்தாலும், குமரி அனந்தன் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே நான் சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்று சொன்னாலும், ஒரு தவறான கணக்கை பொதுப்பணித் துறையிலிருந்து கொடுத் திருக்கிறார்கள். அந்தக் கணக்கை வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இங்கே படித்துவிட்டார்கள். ஏனென்றால் அந்தக் கணக்கு தவறு என்பதை என்னால் நிரூபிக்க முடியும். ஆனால் பராமரிப்பே இல்லாத ஒரு இடத்திலே வாடகையை இப்படி நிர்ணயிப்பது என்பது பொதுப்பணித் துறையினுடைய வழக்கத்திற்கே விரோதமானது. ஆனால் இது அரசியல் பழி வாங்குகிற நோக்கத்தோடு இல்லாமல் இருக்கவேண்டும் என்பதற் காகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வினா கேட்கலாம். இது விளக்கவுரை அல்ல. உங்கள் தொடர்பானதாலே ஒரு வினாவாகக் கேட்கலாம், நீங்களே சில வாக்கியங்களைப் பயன் படுத்துவது ரொம்பத் தப்பு.

திரு. எஸ். ஆர். இராதா : நான் இதை வினாவாக எழுப் பாமல், சட்டமன்ற விதி—53—இல் கண்டிருக்கிறபடி, இந்த வினா நேரத்தில் எழுப்பப்படுகிற பிரச்சினைகளில் ஏதாவது ஒன்று வந்தால், அந்நாள் வினாவில் எழுப்பப் பெற்ற அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென வினா நேரத்தில் கோரியதின் மேல், பேரவைத் தலைவர் தம் உசிதப்படி அதற்கென அந்நாளைய அலுவல் முடிந்த பின்போ,

*1989 மே 11]*

அன்றி அவர் தீர்மானிக்கிற மற்றொரு நாளிலோ அரை மணி நேரத்தை ஒதுக்கலாம் என்று விதியிலே இருக்கிறது. எனவே, அதற்காக ஒரு அரை மணி நேர விவாதத்திற்கு ஒதுக்கி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கவனத்தை நான் எடுத்துக்கொண்டு, நான் எப்போது அரை மணி நேரம் ஒதுக்கு கிறேன் என்பதை விரைவில் தெரிவிக்கிறேன். திரு. அழகர் சாமி.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வாசிக்கும்போது என்னுடைய பெயரிலே மூவாயிரம் ரூபாய் பாக்கியிருப்பதாக வாசித்தார்கள். நாங்கள் சட்ட மன்றத்தில் 8 பேர் இருக்கிற காலத்தில் நான் அந்தக் குழுவி னுடைய தலைவராக இருக்கிறபோது, நாங்கள் எல்லாம் சேர்ந்து சமைத்துச் சாப்பிடுவதற்காக, ஒரு வீடு கேட்டு கொடுக்கப்பட்டிருந்தது. அதிலே நான் சென்ற தடவை தேர்ந் தெடுக்கப்படாதபோது, அந்த வீட்டை என்னுடைய கட்சியின் சார்பிலே உத்திராபதி அவர்களுக்கு மாற்றிக்கொடுக்க வேண்டும் என்று எழுதி இருந்தேன். அது அப்படியே மாற்றிக் கொடுக்கப்பட்டது. அந்தக் கால அவகாசம் ஆறு மாத காலத் திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி, மார்க்கெட் ரேட் என்று சொல்லி—67 ரூபாய் ஒழுங்காகக் கட்டி வந்திருக்கிறோம்—மார்க்கெட் ரேட் என்று சொல்லி மாதம் 700 ரூபாயாகப் போட்டு அந்த பாக்கியை அனுப்பி யிருந்தார்கள். ஆனால் அப்போதே முதலமைச்சரிடத்திலும், அப்போதிருந்த முதலமைச்சருடைய செயலாளர் இடத்திலும் ஒரு மனு கொடுத்து, அதை எல்லாம் ஏற்கனவே ஒழுங்காக நாங்கள் 67 ரூபாய் கட்டியிருக்கிறோம், அப்படியே இன்னொரு உறுப்பினருக்கு மாற்றப்பட்டிருக்கிறது, ஆகவே, மார்க்கெட் ரேட் போடுவது நியாயமல்ல என்று சொன்னேன். தள்ளுபடி செய்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது பாக்கி யாக வந்திருக்கிறது. எல்லோருக்கும் தள்ளி விடுவதாக இருந்தால் சரி, இல்லையெனில் கட்டுவதற்குத் தயாராக இருக் கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோர் சார்பிலும் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருக் கின்றார். நான் சொல்ல வருவது தி. மு. க. உறுப்பினர்கள் மார்க்கெட் ரேட்டிலே வாடகை தரவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டு, அவர்கள் எப்படி காலி செய்யப்பட்டார்கள்

என்ற விவரத்தைத்தான் இங்கே சொன்னேன். மற்றபடி, மற்றவர்கள் சார்பிலே திரு. குமரி அனந்தன் அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் எடுத்துக்கூறிய கருத்துக்களை நாங்கள் ஆலோசிப்போம். (குறுக்கீடு)

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியினுடைய செயலாளராக இருக்கக்கூடிய தோழர் நல்லசிவம் அவர்கள், அவர் மேல் சபை உறுப்பினராக இருந்து, அவருடைய பதவிக் காலம் போனதற்குப் பிறகு, அவர் வைத்திருந்த வீட்டைத் திருப்பி, அடுத்த தேர்தலிலே வந்திருக்கக்கூடிய, ஒரு மாதம், இரண்டு மாத காலத்திற்குள்ளே, இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த வேறு ஒரு உறுப்பினர் பெயரில் அந்தவீடு மாற்றப்பட்டது. அதை அந்த இலாக்காவினுடைய மையத்திலே முறையாக கணக்கு எடுத்துக் கொள்ளாமல் மார்க்கெட் ரேட் என்று எஸ்கலேட் பண்ணி மிகப்பெரிய தொகை 11 ஆயிரம் ரூபாய்க்கு அவருக்கு நோட்டீஸ்அனுப்பினார்கள். நானே போய் அந்த இன்ஜினியரைப் பார்த்துப் பேசினேன். இது அநீதி என்று சொன்னேன். அன்றைக்கு இருந்த பொதுப்பணித் துறை அமைச்சருக்கும் எடுத்துச் சொன்னேன். அவர்கள் அன்றைக்கு இருந்த முதலமைச்சருக்கு விண்ணப்பம் கொடுக்கச் சொன்னார்கள். நான் விண்ணப்பமும் கொடுத்தேன். இனி மேற்கொண்டு இதுபற்றி நோட்டீஸ் வராது என்று அவர் வாயால் சொன்னார், எழுதி தரவில்லை. அதுதான் அந்தப் பிரச்சினை. இது சம்பந்தமான ரெக்கார்டுகளை நான் மாண்புமிகு முதலமைச்சருக்கு எங்கள் கட்சியின் சார்பில் சமர்ப்பிக்கத் தயார். அவர் இது பற்றி பரிசீலித்து முடிவுக்கு வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக ஒருமுறை பதவி போனதற்குப் பின்னால் ஒரு மாதம் குடியிருப்பின் ஏற்கனவே அரசு விதித்த அந்த வாடகையில் இருக்கலாம். அதற்கு மேற்கொண்டு உறுப்பினர்கள் இருக்கவேண்டுமானால் மார்க்கெட் ரேட் தான் போடுவார்கள். இதிலே விசித்திரம் என்னவென்றால் 5 ஆண்டு காலம் கூட பல உறுப்பினர்கள் எம். எல். ஏ. வாக இல்லாமல் மார்க்கெட் ரேட் கொடுக்காமல் இருந்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல நான் மார்க்கெட் ரேட் மாதா மாதம் கட்டிய பிறகும் வெளியே அனுப்பப்பட்டேன். நான் அதற்காக சொல்லவில்லை, ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையின் அடிப்படையில் தெரிவித்தது வேறு. சட்டப்படி ஒரு உறுப்பினர் பதவி போனதற்குப் பிறகு ஒரு மாத காலம் தான் இருக்கலாம். அதற்கு மேல் இருந்தால் வீட்டுக்குத் தக்கபடி மார்க்கெட் ரேட் வசூலிக்கப்படும்.

1989 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 111-இன் கீழ் முதலமைச்சரின் திருத்த அறிக்கைகள்.

(அ) 3—5—1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 111-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றினைத் தங்களுடைய அனுமதியோடு வைக்கிறேன்.

3—5—1989 அன்று சட்டப்பேரவையில் நான் கூறும்போது வன்னியர் சங்கத்தின் அரசியல் பிரிவான பாட்டாளி கட்சி எனப்படும் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. ஆர். விஸ்வநாதன் என்பவர் பேசிய கருத்துக்களை வன்னியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் பேசியதாக போலீஸ் சுருக்கெழுத்தர் அனுப்பிய தகவலை ஒட்டி நான் குறிப்பிட்டேன். அந்த மேடையில் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் இருந்தபோதிலுங்கூட நான் குறிப்பிட்ட கருத்துக்களை அந்தமேடையில் திரு விஸ்வநாதன் என்பவர்தான் பேசியிருக்கிறார். எனவே அதை நடவடிக்கைக் குறிப்பில் திரு சி. என். ராமமூர்த்தி என்பதற்குப் பதிலாக ஆர். விஸ்வநாதன் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

தவறாகத் தகவல் தந்த போலீஸ் சுருக்கெழுத்தர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) 28—4 1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 111—ன் கீழ் மற்றொரு ருத்த அறிக்கை.